ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2010). 13-9-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்த அவசரச் சட்டத்தை நிராகரிப்பது குறித்து திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.

2010 நவம்பர் 12]

பிற்பகல் 1-15

*திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "13-9-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது தீர்மானத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானமும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துரிமை மாற்றங்கள்மீது வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வையின் மீதான மேல் வரி விதிப்பை பேரூராட்சிப் பகுதிகளில் முழுமையாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பகுதியில் இருக்கின்ற வளர்ச்சிப்

@ 10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கே.பி. அன்பழகன்] [2010 நவம்பர் 12

பணிகளையெல்லாம் மேற்கொள்வதற்குக்கூட போதிய நிதியில்லாமல் அந்தப் பேரூராட்சிகள் தடுமாறிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே, தேவையற்ற ஒரு சட்டத்தை அவசரச் சட்டமாக இந்த அரசு கொண்டு வந்ததே முதலில் தவறு. இன்றைய தினத்தில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைக் கட்டமைப்பு நிதியில் வரவு வைத்துக்கொள்வதற்காக, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பேரூராட்சிப் பகுதிகளிலே வருகின்ற அந்த நிதி ஆதாரத்தில் 50 சதவிகிதத்தைப் பேரூராட்சிக்கு விட்டுவிட்டு, மீதமிருப்பதை தமிழ்நாடு நகர்ப்புற சாலைக் கட்டமைப்பு நிதியில் வரவு வைப்பதற்காக கொண்டு வரப்படும் இந்தச் சட்டம் மூலமாக அந்தப் பகுதிகளுடைய வளர்ச்சிகள் மிகவும் தடைப்படுகின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தை கைவிட வேண்டுமென்று எங்கள் உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக்களின் மீதான உரிமையைப் பிறருக்கு மாற்றும்போது, அத்தகைய மாற்றத்தை பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும்போது சொத்தினுடைய மதிப்பில் 8 சதவிகித கட்டணம் முத்திரைத் தீர்வையாகவும் (Stamp Duty), ஒரு சதவிகிதக் கட்டணம் பதிவுக் கட்டணமாகவும் வசூலிக்கப்படுகின்றது. இந்த 8 சதவிகிதத்தில் 2 சதவிகிதம் அந்தச் சொத்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படுகிறது. இது முத்திரைத் தீர்வை மீதான மேல் வரி எனப்படும். இவ்வாறு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு கிடைக்கும் 2 சதவிகித மேல் வரியில் 50 சதவிகிதத்தை பேரூராட்சிகள் தவிர்த்த இதர நகர்ப்புற உள்ளாட்சிகளைப் பொறுத்து குறிப்பிட்ட சாலைக் கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு நகர்ப்புற சாலைக் கட்டமைப்பு நிதியில் (TURIF) வரவு வைக்க வேண்டும். பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய சொத்துக்களைப் பொறுத்து அந்த மேல் வரியை பேரூராட்சி நிதி வரவிலே வைக்க வேண்டுமென்று ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தினுடைய பிரிவு 5-ன் வரம்புரையில் மேற்கண்ட மேல் வரி பேரூராட்சிகளைப் பொறுத்து அவற்றினுடைய நிதிக்

2010 நவம்பர் 12] [திரு. மு.க. ஸ்டாலின்]

கணக்கில் வைக்கவேண்டுமென்று இருக்கிற காரணத்தால் TURIF திட்டத்தின்கீழ் பேரூராட்சிகள் பயனடைய இயலவில்லை. தமிழ்நாடு நகர்ப்புற சாலைக் கட்டமைப்பு நிதியின்கீழ் (TURIF) பேரூராட்சிகளும் பயனடையக்கூடிய வகையிலேதான் மேற்படி சட்டத்தின் பிரிவு 5-ன் வரம்புரையை நீக்கி அவசரச் சட்டம் 13-9-2010 அன்று பிறப்பிக்கப்பட்டது. இதன்படி பேரூராட்சிப் பகுதிகளிலும் மேற்படி மேல் வரியில் 50 சதவிகிதம் TURIF திட்டத்தின் நிதியில் சேர்க்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திருத்த முன்வடிவு அந்த அவசரச் சட்டத்திற்கு பதிலாக அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "13-9-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2010) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 12

பிற்பகல் 1-20

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"That the proposed amendment shall be omitted"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.